Tamil

# முக்கிய தகவல்
# 18 வயதிற்கு உடபட்ட பிள்ளைகள் உங்களுக்கு இருப்பின்

ஒன்டாரியோ பிள்ளைச் சலுகை (Ontario Child Benefit), குறைந்த வருமாணம் உள்ள குடும்பங்களுக்கு அவர்களின் பிள்ளைகளை வளர்க்கும் செலவிற்கு உதவுகின்ற புதிய செயல்த்திட்டம் ஒன்றாகும்.

18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளையுடைய ஒன்டாரியோ வாசிகள் அவர்களின் வருமாணத்திற்கு ஏற்ப ஆடி மாதம் 2008 முதல் வழமையான ஒன்டாரியோ பிள்ளைச் சலுகைகளுக்கு தகுதி பெறுவர்

நீங்கள் தகுதி பெறுவதற்கு **நிச்சயமாக**:

- 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளை ஒன்று உங்களுக்கு இருக்க
- ஒன்டாரியோ வாசியாக நீங்கள் இருக்க
- **வருமான வரி கட்டுபவராக இருக்க**
- கனடா பிள்ளை வரிச் சலுகைக்கு பதிவு செய்திருக்க

வேண்டும்.

## இது எவ்வாறு உங்கள் பொது நலச் சலுகைகளைப் பாதிக்கும்?

- 18 வயதிற்கு உட்பட்ட உங்கள் பிள்ளைகளுக்கு 1ம் திகதி, ஆவணி மாதத்தில் குளிர்கால ஆடைகள் அல்லது மீண்டும் பாடசாலைக்கு செல்லுகைக்கான உதவித் தொகை போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான பணம் உங்களுக்கு கிடைக்க **மாட்டாது**. இச் சலுகைகள் உங்கள் மாதாந்த ஒன்டாரியோ பிள்ளைச் சலுகைப் பணத்தினுள் அடங்கும்
- உங்கள் பிள்ளைகளின் இருப்பிட உதவித் தொகை, ஆரோக்கியம் மற்றும் பல் மருத்துவ சலுகைகளை பொது நலச் செலவு தொடர்ந்து ஏற்றுக் கொள்ளும்.
- உங்கள் பொதுநலச் சேவை பணக் காசோலையில் இருந்து மேலதிக உதவி வழங்கும் தேசிய பிள்ளைச் சலுகைப் பணம் (National Child Benefit Supplement) ஆவணி மாதம் 2008ல் இருந்து கழிக்கப்பட மாட்டாது.

## ஒன்டாரியோ பிள்ளைச் சலுகை குறித்து மேலதிக விபரம் உங்களுக்கு தேவையா?

**வருமான வரி இலாகவை 1-888-789-4199, காது கேட்காதோர் தொலைபேசி இலக்கம் 1-800-387-5559ல் தொடர்பு கொள்ளவும் அல்லது [www.OntarioChildBenefit.ca](http://www.OntarioChildBenefit.ca) இணையத்தளத்ததை பார்க்வும்**